# CENTRE FOR MONITORING ELECTION VIOLENCE

# මැතිවරණ ප්‍රචණ්ඩත්‍රියා නිරීක්ෂණ මධ්‍යස්ථානය

# தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்

**No:** 24/2, 28th Lane, Off Flower Road, Colombo 07
**Tel:** +94 11 2565304 – 6, 5552746, 5552749, **Fax:** +94 114714460
**E-mail:** cmev@cpalanka.org **Website:** www.cpalanka.org


**வடமாகாணசபைத் தேர்தல் 2013**

**ஊடக அறிவித்தல் இல 06**

**செப்டெம்பர் 20, 2013, சுழிபுரம், வட்டுக்கோட்டை தேர்தல் தொகுதி, யாழ்ப்பாண மாவட்டம், வட மாகாணம் .**

தே.வ.க.நி களக் கண்காணிப்பாளரால் அறிவிக்கப்படி, சுழிபுரம் பகுதியில் தொல்புரம் எனுமிடத்தில் உள்ள ஆனந்தி சசிதரன் (த.தே.கூ வேட்பாளர் இல.1 – யாழ் மாவட்டம்) அவர்களின் வதிவிடமும் மற்றும் பிரச்சார அலுவலகமும் செப்டெம்பர் 19, நள்ளிரவில் இராணுவத்தைச் சேர்ந்த ஒரு குழுவினரால் தாக்கப்பட்டதாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. தாக்குதல் நடாத்தியவர்களில் சிலர் சிங்கள மொழியில் பேசியதாகவும் மற்றும் தே.வ.க.நி இற்கு அவர்களது உடையிலிருந்து, இராணுவத்தைச் சேர்ந்தவர்களாக அடையாளம் காணப்பட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது. சட்டத்தரணி சுகாஷ் என்பவர் உட்பட, பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக சென்ற ஒன்பது (09) பேர்கள் இச்சம்பவத்தில் காயமடைந்தனர். திருமதி. சசிதரன் தனது பிள்ளைகளுடன் தாக்குதலில் இருந்து தப்பித்துக் கொண்டார்.

தே.வ.க.நி யாழ் பொலிஸ் தலைமை அலுவலகத்தை நள்ளிரவு 12.45 அளவில் தொடர்பு கொண்ட போது, பொலிஸ் அத்தகையதொரு சம்பவம் பற்றி தாங்கள் அறியவில்லை எனவும், தே.வ.க.நி ஐ வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தை தொடர்பு கொள்வதற்கும் பணித்தது. எவ்வாறாயினும், வட்டுக்கோட்டைப் பொலிசாரை தே.வ.க.நி அதிகாலை 1.05 அளவில் தொடர்பு கொண்டு கேட்ட பொழுது சுழிபுரம் தங்களது கட்டுப்பாட்டுப் பிரிவிற்குள் வரவில்லை எனப் பதிலளித்தனர். எனினும், மீண்டும் தொடர்பு கொண்ட போது, பொலிஸ் உத்தியோகத்தர்களைக் கொண்ட ஒரு குழு அவ்விடத்திற்கு சேவையில் இடப்பட்டதாக தே.வ.க.நி இற்கு பொலிஸ் அறிவித்தது. காலை 8.00 மணியளவில் இச்சம்பவம் குறித்து பொலிஸ் உத்தியோகபூர்வ முறைப்பாடு எதுவும் தங்களது பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்படவில்லை என தே.வ.க.நி இற்கு அறிவித்தனர்.

இந்த தாக்குதலில் குற்றம் செய்தவர்களாக இராணுவம் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்படுவது குறித்து தே.வ.க.நி குறிப்பாக கவலை கொள்கிறது. தேர்தல் பிரச்சாரங்கள் முழுவதிலுமாக, சீருடையுடன் இராணுவத்தைச் சேர்ந்தவர்களாலும் மற்றும் இராணுவப் புலனாய்வாளர்கள் மற்றும் சிவில் பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்தவர்களால் வாக்காளர்கள் அச்சுறுத்தப்படுதல் மற்றும் மிரட்டப்படுதலோடு குறிப்பிட்ட கட்சி யின் வேட்பாளர்கள் சார்பில் தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவது குறித்து பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. தேர்தல் பிரச்சாரங்கள் செப்டெம்பர் 18, புதன் கிழமை நள்ளிரவுடன் முடிவடைந்ததைத் தொடர்ந்து , தே.வ.க.நி இற்கு அறிவிக்கப்பட்ட அத்தகைய சம்பவங்கள் அதிகரித்துள்ளது.

தேர்வு செய்யும் அடிப்படை மற்றும் செயற்படுகின்ற ஜனநாயகத்தில் மாற்றத்தைக் கொண்டு வருகின்றதுமான தேர்தல் செயன்முறைகளில் இராணுவத்தின் எந்தவொரு ஈடுபடுதலையும் தே.வ.க.நி முற்றும் முழுவதுமாக கண்டிக்கின்றது. அத்தகைய ஈடுபாடு தேர்தல் செயன் முறையின் நம்பகத்தன்மையை கடுமையாக மறுப்பதுடன் இந்த தேர்தல் சூழமைவில், நாட்டில் நல்லிணக்கம் மற்றும் ஐக்கியத்துக்கான சாத்தியங்களையும் மோசமான வகையில் மறுக்கிறது.

இந்த ஈடுபாடு நிறுத்தப்படுவதுடன் வன்முறைகள் மற்றும் ஒழுங்கீனங்கள் தொடர்பான குற்றச்சாட்டுச் சம்பவங்கள் அனைத்தும் புலன்விசாரணை செய்யப்பட்டு குற்றம் புரிந்தவர்கள் நீதியின் முன் கொண்டு வரப்படுவதை உறுதிசெய்வதற்கு தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை தே.வ.க.நி வேண்டுகிறது. நிறுவனங்களைப் பாதுகாத்தல் மற்றும் வலுப்படுத்துதல் மற்றும் நாட்டின் தேர்தல் ஜனநாயகச் செயன் முறைகள் என்பன, இதை விடக் குறைந்தவற்றைக் கோரவில்லை. முடியாதுள்ளது.

| | | |
|---|---|---|
| கலாநிதி பா.சரவணமுத்து<br>இணை-அழைப்பாளர் | சுனில் ஜயசேகர<br>இணை-அழைப்பாளர் | உதய கலுபதிரண<br>இணை-அழைப்பாளர் |